# இஎஸ்ஐ சார்பில் விழிப்புணர்வு நிகழ்ச்சி



▸ தொழிலாளர் அரசு காப்பீட்டுக்கழகத்தால் அனுசரிக்கப்பட்ட இருவார சிறப்பு சேவைகளின் ஒரு பகுதியாக சேலம் இஎஸ்ஐசி துணை மண்டல அலுவலகத்தின் இயக்குனர் (பொறுப்பு) எஸ்.சிவராமகிருஷ்ணன், பங்குதாரர்களுக்கு விழிப்புணர்வு நிகழ்ச்சியை திருச்சியில் 7.3.2023 அன்று நடத்தினர். இதில் திருச்சி இஎஸ்ஐ மருத்துவமனை தலைமை அறுவை சிகிச்சை நிபுணர் டாக்டர் சரவணன் சம்மந்தப்பட்டவர்களின் மருத்துவ பயன்கள் குறித்த சந்தேகங்களுக்கு விளக்கம் அளித்தார். இதில் 100க்கும் மேற்பட்டோர் பங்கேற்று பயனடைந்தனர்.